டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 5.10.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 092 - Madurai | Online Edition

# விவசாயிகளுக்கான கௌரவ நிதி உதவித்திட்டத்தின் 18வது தவணைத் தொகை

# இன்று பிரதமர் விடுவிக்கிறார்

புது தில்லி, அக்.4

பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ நிதித் திட்டத்தின் 18-வது தவணைத் தொகையை பிரதமர் நரேந்திர மோடி, 2024 அக்டோபர் 5-ம் தேதி மகாராஷ்டிராவின் வாஷிமில் விடுவிக்கிறார்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில், நாடு முழுவதும் 9.4 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் எந்தவொரு இடைத்தரகர் களின் ஈடுபாடும் இல்லாமல் நேரடி பலன் பரிமாற்றம் மூலம் ரூ.20,000 கோடிக்கும் அதிகமான நேரடி நிதிப் பலன்களைப் பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிர ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், மகாராஷ்டிர முதலமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின் றனர். ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர்கள் அஜித் பவார், தேவேந்திர ஃபட்னாவிஸ், மண், நீர் பாதுகாப்பு அமைச்சர் சஞ்சய் ரத்தோட் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். வாஷிம், நாடு முழுவதும் உள்ள 732 வேளாண் அறிவியல் மையங்கள், 1 லட்சத்துக்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், 5 லட்சம் பொதுச் சேவை மையங்கள் மூலம் சுமார் 2.5 கோடி விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் இணையதளம் மூலம் பங்கேற் பார்கள். மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பிரதமர் கிசான் உத்சவ் திவாஸ் என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.

2019 பிப்ரவரி 24 அன்று பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ நிதித்திட்டம் தொடங்கப்பட்டது. நில உரிமையாளர் விவசாயி களுக்கு இத்திட்டத்தில் மூன்று சம தவணைகளில் ஆண்டுதோறும்

ரூ.6,000 வழங்கப்படுகிறது. பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ நிதித் திட்டத்தின் 18-வது தவணையை அக்டோபர் 5 ஆம் தேதி பிரதமர் விடுவிக்கிறார். 18-வது தவணை விடுவிக்கப்படுவதன் மூலம், இத்திட்டத்தின் கீழ் மொத்த நிதி உதவி வழங்கல் ரூ.3.45 லட்சம் கோடியைத் தாண்டும். இது நாடு முழுவதும் 11 கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதுடன், கிராமப்புற வளர்ச்சிக்கும் விவசாய மேம்பாட்டுக்குமான அரசின் அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

மகாராஷ்டிராவில், திட்டத்தின் 17 தவணைகளில் சுமார் 1.20 கோடி விவசாயிகளுக்கு சுமார் 32,000 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு உள்ளது. இது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் இரண்டாவது மிக உயர்ந்த தொகையாகும். 18-வது தவணையில், மகாராஷ்டிராவில் சுமார் 91.51 லட்சம் விவசாயிகள் ரூ.1,900 கோடி பெறுவார்கள்.

இந்த 18-வது தவணைத் தொகை விநியோகத்துடன், மகாராஷ் டிராவில் செயல்படுத்தப்படும் ஷேத்கரி மகாசன்மன் நிதி யோஜ னாவின் 5-வது தவணையின் கீழ் மகாராஷ்டிராவின் விவசாயி களுக்கு சுமார் 2,000 கோடி ரூபாய் கூடுதல் பலன்களையும் பிரதமர் விடுவிப்பார்.

மேலும், வேளாண் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, புதிய அரசின் முதல் 100 நாட் களில் வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின் கீழ், முடிக்கப்பட்ட பல திட்டங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும். 2020-ல் தொடங்கப்பட்ட வேளாண் உள்கட்டமைப்பு நிதியம், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உள்கட்டமைப்பு, சமூக விவசாய சொத்துக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடுத்தர முதல் நீண்ட கால கடன் நிதி வசதியாகும். இந்த திட்டம் தகுதியான கடன் வாங்குபவர்களுக்கு 3% வட்டி மானியத்தையும் கடன் உத்தரவாத வசதியுடன் ஒரு லட்சம் கோடி ரூபாய் கடனையும் வழங்குகிறது. கடந்த 100 நாட்களில், நாடு முழுவதும் 10,066 க்கும் மேற்பட்ட வேளாண் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இதில் ரூ.6,541 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது (அனுமதி கப்பட்ட தொகையான ரூ.97.67 கோடியுடன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான 101 திட்டங்கள் உட்பட). கூடுதலாக, மொத்தம் ரூ.1,929 கோடி ஒப்புதலுடன் 7,516 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ.13.82 கோடி மதிப்புள்ள 35 உற்பத்தியாளர் திட்டங்கள் அர்ப்பணிக்கப்படும். இத்திட்டங்கள் வேளாண் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், சேமிப்பு, பதப்படுத்துதல், சரக்குப் போக்குவரத்து

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வசதிகளை மேம்படுத்துதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளை அதிகரிக்க உதவுதல் என விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்தமாக விவசாயத் துறைக்கும் கணிசமாக பயனளிக்கின்றன.

ஒரு வலுவான மதிப்பு விநியோகச் சங்கிலியை நிறுவுவதற்கும், சிறிய, குறு, நிலமற்ற விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்கும், நாட்டின் ஒவ்வொரு தொகுதியையும் உள்ளடக்கிய 10,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் மத்திய அரசு மத்திய துறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இன்று வரை, சுமார் 9,200 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு, 8.3 லட்சம் பெண்கள், 5.77 லட்சம் எஸ்சி, எஸ்டி, பயனாளிகள் உட்பட 24 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் இப்போது 1,300 கோடி ரூபாய்க்கு மேல் வருடாந்திர வருவாயைக் கொண்டுள்ளன. அவை இந்நிகழ்வின் போது பிரதமரால் தேசத்திற்கு அர்ப்பணிக்கப்படும்.

பிரதமரின் இந்தியாவில் தயாரிப்போம், 'தற்சார்பு இந்தியா' ஆகிய தொலைநோக்குப் பார்வைகளுக்கு ஏற்ப, உள்நாட்டு பாலின வகை விந்து உற்பத்தி தொழில்நுட்பமும் இந்த நிகழ்வில் அறிமுகப் படுத்தப்படும். இந்த மலிவு தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு பாலின வரிசைப்படுத்தப்பட்ட விந்து கிடைப்பதை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது ஒரு டோஸுக்கு சுமார் ரூ.200 செலவைக் குறைக்கிறது. கூடுதலாக, கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை (DAHD) உருவாக்கிய ஒருங்கிணைந்த மரபணு சிப், கால்நடைகளுக்கான 'கௌ சிப்', எருமைகளுக்கான 'மஹிஷ் சிப்' ஆகியவற்றை பிரதமர் அறிமுகப்படுத்துவார். இந்திய இனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த சிப், இளம் வயதிலேயே இளம், உயர்தர காளைகளை அடையாளம் காண்பதன் மூலம் கால்நடை தேர்வு குறித்து விவசாயிகள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும். இது இந்தியாவில் பால் பண்ணைகளின் செயல்திறனை மேம்படுத்தும்.

தொலைநோக்குப் சிந்தனையுடன் பார்க்கும் போது குசும்-சி திட்டத்தின் கீழ் சுமார் 3,000 மெகாவாட் விருது கடிதங்களை மின்னணு முறையில் விநியோகிப்பது, கிராம பஞ்சாயத்துகளுக்கு சமூக மேம்பாட்டு மானியங்களை மின்னணு முறையில் விநியோகிப்பது ஆகியவற்றையும் பிரதமர் தொடங்கி வைப்பார். எம்.எஸ்.கே.வி.ஒய் 2.0-ன் கீழ், மொத்தம் 19 மெகாவாட் திறன்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

கொண்ட ஐந்து சூரிய பூங்காக்கள் தேசத்திற்கு அர்ப்பணிக்கப்படும், இது நிலையான மின் தீர்வுகளுக்கு பங்களிக்கும். அத்துடன் விவசாயிகளுக்கு பகல்நேர மின்சாரம், நில குத்தகை மூலம் கூடுதல் வருமான ஆதாரத்தை வழங்குகிறது.

5 சூரிய பூங்காக்கள் பின்வருமாறு, தோண்டல்கான், சா. சம்பாஜி நகர் – 3 மெகாவாட், பாம்னி பிகே, நான்டெட் – 5 மெகாவாட், கோண்ட்கிரி, கோலாப்பூர் – 3 மெகாவாட், ஜலாலாபாத், அகோலா – 3 மெகாவாட், பல்ஷி பிகே, புல்தானா – 5 மெகாவாட்.



# பி.எம்.கிசான் சம்மன் நிதி 18வது தவணை வெளியீடு

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இணையவழி ஒளிபரப்பு

திருச்சி, அக்.4

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் 18வது தவணை வெளியீடு நிகழ்ச்சி நேரடி இணையவழி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் 18வது தவணை தொகையை இன்று மதியம் 12.00 மணிக்கு விடுவிக்கிறார். இந்நிகழ்ச்சியானது சிறுகமணி வேளாண்மை அறிவியல்






நிலையத்தில் இணையவழி வழியே நேரடியாக ஒளிபரப்பாக உள்ளது. விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும்.

மேலும் விவரங்கள் மற்றும் தொடர்புக்கு 0431-2962854, 91717 17832, 82484 85377, 88381 26730 என்ற எண்களை தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு : மரக்கன்றுகள் பெற அடங்கல் நகல் மற்றும் ஆதார் நகல் அவசியம் கொண்டு வரவும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 04.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 28 | 32 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 42 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 64 |
| 2 | வெண்டை | 30 | 34 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 50 | 55 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 50 | 55 | 60 | கேரட் | 45 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 54 | 61 | பீட்ருட் (ஊட்டி) | 35 | 40 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன்(L/G) | 26 | 30 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 16 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 26 | 30 | 66 | காளிபிளவர் | 54 | 58 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 90 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 45 | 52 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 28 | 32 | 73 | ஊட்டி அவரை | 120 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 45 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 60 | 68 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 120 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 45 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ருட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 36 | | | | |

# பி.எம்.கிசான் நிதி திட்டத்தில் 18வது தவணையை பெறவிருக்கும் விவசாயிகளுக்கான வேளாண்மை இணை இயக்குநரின் ஆலோசனை

புதுக்கோட்டை, அக்.4

புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம். ரவிச்சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பி.எம். கிசான் நிதி திட்டத்தின் மூலம் சொந்தமாக விவசாய நிலம் வைத்திருக்கும் விவசாய குடும்பங்களுக்கு உதவி தொகையாக நான்கு மாதத்திற்கு ஒரு முறை ரூ. 2000/- வீதம் ஆண்டிற்கு ரூ.6000/- மூன்று தவணைகளில் விவசாயிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் நேரடி பரிமாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தொடர்ந்து 18-வது தவணையை பெறுவதற்கு விவசாயிகள் தங்கள் ஆதார் விவரங்களை பி.எம். கிசான் வலைதளத்தில் பதிவேற்றம் செய்வது அவசியமாகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 1378 பேர் e-KYC பதிவேற்றம் செய்யாமல் இருக்கின்றனர். ஆகவே, ஆதார் விவரங்களை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யாமல் இருக்கும் விவசாயிகள் விரைந்து தங்களது ஆதார் விவரங்களை பதிவேற்றம் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவசாயிகள் 18-வது தவணைத் தொகையை பெறுவதற்கு தங்களது ஆதார் விவரங்களை வங்கி கணக்குடன் இணைத்திருக்க வேண்டும். புஇதுவரை 3884 விவசாயிகள் தங்களது ஆதார் விவரங்களை வங்கி கணக்குடன் இணைக்காமல் உள்ளனர். எனவே, மேற்கூறிய விவசாயிகள் தங்களது ஆதார் விவரங்களை வங்கி கணக்குடன் இணைத்து 18-வது தவணைத் தொகையை தொடர்ந்து பெறுவதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி.எம். கிசான் திட்டத்தில் பிப்ரவரி 2019-க்கு முன்பு நேரடி பட்டா உள்ள அனைத்து விவசாயிகளும் பி.எம். கிசான் வலைதளத்தில் புதிதாக பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதற்கு பிறகு வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து பி.எம். கிசான் திட்டத்தில் பயன்பெறலாம்.

பிரதி வாரம் வெள்ளிக்கிழமை தோறும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், புதுக்கோட்டை, வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திலும் இயங்கி வரும் பி.எம்.கிசான் சிறப்பு உதவி மையத்தை விவசாயிகள் அணுகி பி.எம்.கிசான் திட்டம் தொடர்பான தங்களது குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு பயன் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோவை, அக்.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற் கான பயிற்சி, 7.10.2024 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை ற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்தசேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்




பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோவை, அக்.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி 7.10.24 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று, பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) (வரி கட்டணம் உட்பட) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப் படும். பயிற்சியானது காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.



# வாலாஜா இயற்கை விவசாய குழுவிற்கு கரிம வேளாண்மை கண்டுணர் சுற்றுலா பயிற்சி



இராணிப்பேட்டை, அக்.4

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டாரத்தில், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் முகுந்தராயபுரம் இயற்கை வேளாண்மை குழுவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கரிம வேளாண்மை பயிற்சி மற்றும் வேளாண் கண்டுனர் சுற்றுலா சோளிங்கர் வட்டாரம் மேல்வெங்கடாபுரம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி இயற்கை விவசாயி புவனேஸ்வரி பாண்டுரங்கனின் நிலத்தில் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமையில் நடைபெற்றது. மேலும் வேளாண்மை அலுவலர் நித்யா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் அசோக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

பயிற்சியில் சிறப்புரையாக முன்னோடி இயற்கை விவசாயி புவனேஸ்வரி விவசாயிகளுக்கு கரிம முறையில் எவ்வாறு பயிர் செய்து பயனடைவது என்பதை விரிவாக கூறினார். மேலும் கால்நடை கழிவுகளில் இருந்து உயிரி வாயு உற்பத்தி செய்யும் முறையினை கூறி அதன் நன்மைகளை விரிவாக எடுத்துரைத்தார். மேலும் திடக்கழிவு மேலாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் மண்புழு உரம் எவ்வாறு இயற்கையில் கிடைக்கும் விவசாய கழிவு பொருட்களான சாணம், இலை, தலைகளை பயன்படுத்தி தயாரிப்பது என்பதையும் மண்புழு உரங்களை விவசாயிகளுக்கு காண்பித்து அதில் உள்ள தழைச்சத்து மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களையும் மற்றும் மண்புழு உரத்தின் நன்மைகளையும் கூறினார்.

இறுதியாக அசோக்குமார், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் குழு ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்ட அனைத்து விவசாய பெருமக்களுக்கும், சிறப்புரையாற்றிய புவனேஸ்வரிக்கும், வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்து நிகழ்ச்சியினை நிறைவு செய்தார்.

# நானோ யூரியா பிளஸ்

20 சதவீதம்

தழைச்சத்து கொண்ட நானோ திரவம்

500 மிலி
ரூ.225/-




இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி

- ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
- முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
- இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
- அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.



# அழிந்து வரும் நாணல் செடி? அதை எதற்காக பாதுகாக்க பட வேண்டும் தெரியுமா?



'நாணல் போல வளைவது தான் சட்டமாகுமா' என்ற திரைப்பட பாடல் கூட நாணலின் நளினத்தை பாடிகிறது. ஆம் நாணல் ஆற்றின் ஓரங்களில், பெருமளவில் காணப்படும். இந்த செடி எந்த ஒரு வெள்ளத்தையும் எதிர்த்து உயிர் வாழும் பெரும் ஆற்றலைக் கொண்டது. நாணல் என்பது சில பேரினங்களைச் சார்ந்த தாவர இனங்களுக்கு பொதுவாக வழங்கப்படும் பெயராகும்.

இதை செடி என்று சொல்வதை விட புல் வகை சார்ந்த புல் என்பதே சரியானதாகும். இதனை தர்ப்பை புல் என்றும், குசப்புல், தருப்பை என்றும் நாணல் கோரை என்றும் சொல்லுவார்கள். நம்முடைய முன்னோர்கள் இதனை தான் யாகங்கள் செய்ய பயன்படுத்துவார்கள்.

**இன்றைய நிலையில் நாணல்கள்?**

நாணல்கள் எந்த செலவும் இல்லாமல் இயற்கையாகவே ஆற்றின் கரை ஓரங்களில் வளரும். இன்றைய கால சூழலில் மணல் கொள்ளையர்களால் மண்மேடுகள், கரைகளை அதல பாதாளத்தில் வெட்டி அள்ளுவதால் அதனுடைய கிழங்குகள் வேர்கள் உட்பட அகற்றப்பட்டு அழிந்து போகும் நிலையில் தான் உள்ளது.

**நாணல் புல்லின் பயன் தெரியுமா?**

நீரை சுத்தப்படுத்துகிற வேலையில் முக்கிய பங்காற்றுகிறது என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா?

தொழிற்சாலை கழிவுகளால் ஆற்றின் நீர் மாசுபடுகிறது. அந்த மாசுபட்ட நீரில் உள்ள கனரக உலோக அயனிகளை அகற்றுகிறது. அதுமட்டுமல்லாது தாழ்வான நிலப்பரப்பில் வளரும் நாணல் புல் ஆக்சிஜனை அவற்றின் தளிர் மண்டலத்தில் இருந்து வேர் மண்டலத்திற்கு (ROOT ZONE) மாற்றுவதை ஆய்வு மூலமாக கண்டறிய பட்டுள்ளது. கனரக உலோக அயனிகளை (HEAVY METALS) தளிர் மண்டலத்தில்

இருந்து ஈர்த்து வேர் மண்டலத்திற்கு மாற்றி விடும் காரணமாக துத்தநாகம், நைட்ரேட், காட்மியம் போன்ற நச்சு கொண்ட தண்ணீரில் கூட நாணல் தலை நிமிர்ந்து உயிர் வாழ்கிறது.

நாணல்கள், வெட்டி வேர்செடி போல தண்ணீரில் காணப்படும் கனரக ரசாயன உலோகங்களின் அயனிகளை எளிதாக வடிகட்டி, பிரித்து தண்ணீரை தூய்மைபடுத்தும் இயல்பைக் கொண்டுள்ளது. பெரிய பெரிய எந்திரங்களால் கூட எளிதில் தண்ணீரில் (ஆற்று நீரில்) இருந்து பிரிக்க முடியாத உலோக அயனிகளை கூட பிரிக்கிறது என்ற தரவுகள் உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நாணலை நாம் அழிவில் இருந்து பாதுகாக்க மணல் கொள்ளை தடுக்க வேண்டும். நாணல் செடிகளின் பெருக்கத்தை அதிகரிக்க தேவையில்லாத மற்ற செடிகளை அகற்றி நாணல் வாழ வழி வகை செய்ய வேண்டும்.




**நாணலை பற்றி பழமொழி தெரியுமா?**

உடைந்தால் முருங்கை, வளைந்தால் நாணல்' என்றும் கூறுவார்கள்.

திரைப்பட பாடல்களில் கூட நாணலை அதனுடைய நளினத்தை அழகான வரிகளால் பாடப்படுகிறது.

இதோ அந்த வரிகள் "காற்று வந்தால் தலை சாயும் நாணல், என்ன அருமை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெல் விதைப்பண்ணைகளை பதிவு செய்ய விதைச் சான்றளிப்புத்துறை உதவி இயக்குநர் அழைப்பு

கோவை, அக்.4

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை கோட்டூர், வேட்டைக்காரன்புதூர், பொங்காலியூர், வடக்கலூர் ஆகிய பகுதியில் தனியார் விதை உற்பத்தியாளர்களால் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு தற்சமயம் பயிர் பூப்பருவம் எய்தும் நிலையில் உள்ளது. விதைப்பண்ணைகளை பதிவு செய்ய கோவை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர், பி.ஆ. மாரிமுத்துஅழைப்பு விடுத்துள்ளார்.



நடப்பு பருவத்திற்கு ஏற்ற ரகங்களான கோ.51, கோ.55, ASD 16, ADT 37 மற்றும் ADT(R) 45 அதிகளவில் விதைப்பண்ணைகள் தனியார் விதை உற்பத்தியாளர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ரகங்கள் குறுகிய வயதுடையவைகளாகும். விதைச்சான்று நடைமுறையின்படி நெல் விதைப்பண்ணைகளை பூப்பதற்கு முன்பு விதைச்சான்று உதவி இயக்குநர், விதைச்சான்றளிப்பு துறை அலுவலகம் தடாகம் சாலை, கோவையில் பதிவு செய்யப்பட வேண்டும். விதைப் பண்ணைகளின் விதைப்பறிக்கைகளை தயார் செய்து SPECS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் விதைப்பறிக்கைகள் மூன்று நகல்களில் விதை ஆதார அட்டைகள் மற்றும் விற்பனைப் பட்டியலுடன் உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்பித்து, பதிவுகட்டணம் ஒரு விதைப்பறிக்கைக்கு ரூ.25ம், வயலாய்வு கட்டணம் ஏக்கருக்கு ரூ.100ம், பகுப்பாய்வு கட்டணம் குவியலுக்கு ரூ.80ம் பதிவின் போது செலுத்த வேண்டும்.

குறுகிய கால ரக விதைப்பண்ணைகளை விதைச்சான்று அலுவலர்களால் பூப்பருவத்தில் (85வது நாள்) மற்றும் முதிர்ச்சி நிலையில் (95வது நாள்) ஆய்வு பணி மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் போது, விதைப் புதேதி, ரகம், விதை ஆதாரம், பரப்பு விலகு தூரம், கலவன் கணக்கீடு, மகசூல் கணக்கீடு செய்தல் போன்ற பணிகள் விதைச்சான்று அலுவலர்களால் மேற் கொள்ளப் படுகிறது. வயல்தரத்தில் தேரும் விதைப்பண்ணைகள் அறுவடைக்கு அனுமதிக்கப்படுகிறது. அறுவடை முடிந்து மூட்டைகளில் பிடிக்கப் பட்ட வயல்மட்ட விதைக்குவியல் அரசு அங்கீகாரம் வழங்கப்பட்ட, சுத்தி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு சுத்தி பணி செய்யப்படுகிறது.

சுத்தி செய்யப்பட்ட விதைக்குவியல்களிலிருந்து விதை மாதிரிகள் எடுத்து அரசு விதை பரிசோதனை நிலையத்திற்கு விதை மாதிரிகள் அனுப்பப்பட்டு அங்கு விதை தரங்களான, முளைப்புதிறன் புறத் தூய்மை, ஈரப்பதம், பிற ரகம் கலவன்கள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டபிறகு, விதைத்தரத்தில் தேரும் விதைக்குவி-யலுக்கு ஆதார நிலை விதைக்குவியலுக்கு வெள்ளை நிற சான்றட்டைகள் (கட்டணம் ரூ.5/ அட்டை) மற்றும் சான்று நிலை விதைக்குவியலுக்கு நீலநிற சான்றட்டைகள் (ரூ.4/ அட்டை) வழங்கப்பட்டு, விதைச்சான்று விபரங்களை அச்சிடப்பட்டு, உற்பத்தி யாளர் விபர அட்டையுடன் விதைக்கொள்கலன்களுக்கு சான்றட்டை பொருத்தப்பட்டு தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்க தயாராகிறது.

எனவே, அனைத்துவிவசாயிகளும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவதன் மூலம்அதிக மகசூல் பெறலாம் என கோவை மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், பி.ஆ.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.



Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
• அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
• பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
• மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# இயற்கை வேளாண்மையில் உயிர் உரங்களை பயன்படுத்தி மண்வளம் காப்போம்

புதுக்கோட்டை, அக்.4

இயற்கை வேளாண்மையில் உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் இடு பொருளுக்கு ஆகும் செலவைக் குறைத்து மண் வளத்தைப் பெருக்கி அதிக மகசூல் பெறலாம் என புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் மு.மதியழகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, அனைத்து வகை தாவரங்களுக்கும் தழைச்சத்து இன்றியமையாதது. நைட்ரஜன் எனப்படும் தழைச்சத்தில் இருந்து தான் தாவரங்களுக்கு தேவையான புரதங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே தழைச்சத்தை பெறுவதற்கு நுண்ணுயிர் அடங்கிய உரங்களையோ அல்லது நுண்ணுயிரோடு இணைந்து வாழும் உயிரினங்களையோ உரமாக இட்டு சாகுபடி செலவை குறைக்கலாம்.

**ரைசோபியம் :** உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறு வகைத் தாவரங்கள், எண்ணெய் வித்து, நிலக்கடலை போன்ற பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை ரைசோபியம் என்னும் பாக்டீரியா செடிகளின் வேர்களில் வேர்முடிச்சில் சேகரிக்கின்றன. பயறுவகை பயிர்களின் விதையுடன் ரைசோபியம் உயிர் உரங்களை கலந்து விதைத்தால் வேர் முடிச்சுகள் அதிகரித்து அதிக தழைச்சத்து நிலைநிறுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கிறது. சாதாரணமாக 20 கிலோ விதைகளுக்கு 200 கிராம் ரைசோபியத்தை சோற்று வடிச்ச கஞ்சியுடன் கலந்து விதைநேர்த்தி செய்து ஒரு நாள் கழித்து விதைக்க வேண்டும். இப்படி செய்வதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது. மேலும் 3-ல் ஒரு பங்கு நைட்ரஜன் உரத்தேவையும் குறைகிறது.

**அசோஸ்பைரில்லம் :** அசோஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிர் பாக்டீரியா நெல், மக்காச் சோளம், கம்பு, பருத்தி, கரும்பு உள்ளிட்ட பயிர்களின் வேர்ப் பகுதிகளில் வளர்த்து காற்றில் உள்ள தழைச்சத்தை நிலை நிறுத்துகிறது. இதை பயன்படுத்தும் போது ஏக்கருக்கு 10 கிலோ வரை தழைச்சத்து (22 கிலோ யூரியா அளவு) சேமிக்கப்படுகிறது. மேலும் ஜிப்பர்லிக் அமிலம், இன்டோல் அசிடிக் அமிலம், போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கிகளையும் அசோஸ்பைரில்லம் உற்பத்தி செய்வதால் பயிர் நன்கு வளர்ந்து விளைச்சல் அதிகமாகிறது. இதை விதை நேர்த்தி செய்தும், நாற்றின் வேர்ப்பாகத்தில் நனைத்தும் மக்கிய தொழுஉரத்துடன் கலந்து மண்ணில் இட்டும் பலவகைகளில் பயன்படுத்தலாம்.

**பாஸ்போபாக்டீரியா :** இந்த வகையான பாக்டீரியா மண்ணிலுள்ள மணிச்சத்தை கரைத்து பயிர்களுக்கு வழங்குகிறது. சில வகை அமிலங்களை இந்த பாக்டீரியா உற்பத்தி செய்து மண்ணிலுள்ள கரையாத பாஸ்போட்டை கரைத்து பயிர்களுக்கு அளிக்கிறது. இதை பயன்படுத்துவதால் 20 சதவீதம் மணிச்சத்து தரும் ரசாயன உர பயன்பாட்டை குறைக்கலாம். வேர்கள் செழித்து வளரவும், திசுக்கள் வளம் பெற்று கதிர்கள் செழித்து வளரவும், தழைச்சத்தை அதிக அளவு ஈர்க்கவும் பாஸ்போபாக்டீரியா பயன்படுகிறது. சில வகை உயிர் உரங்களுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நெல் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் பெறலாம்

இராமநாதபுரம், அக்.4

இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதைப்பண்ணை அமைப்பதற்கு தேவையான வல்லுநர் விதை மற்றும் ஆதாரநிலை நெல் விதைகளை தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் பெற்றிடலாம். கோ 51, கோ 55 மற்றும் ஆடுதுறை 45 போன்ற குறுகிய கால விதை இரகங்கள் மற்றும் என் எல் ஆர் 34449, ஆர்.என்.ஆர் 15048 மற்றும் பிபிடி 5204 போன்ற மத்திய கால விதை இரகங்களை தேர்வு செய்யலாம்.

விதைப்பண்ணை அமைப்பதற்கு முன் விதைப்பண்ணை விவசாயிகள் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். உயிர் எதிர் பூசனக்கொல்லி மருந்தான சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். பூஞ்சானகொல்லி விதை நேர்த்தி செய்த 24 மணி நேரத்திற்கு பிறகு அசோஸ்பைரில்லம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் 400 கிராம் அசோஸ்பைரில்லத்துடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்வதால் விதை முளைப்புத் தன்மை அதிகப்படுத்தப்படுகிறது. விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்க்கிருமிகள் மற்றும் பூச்சிகளிலிருந்து முளைக்கும் விதைகளைப் பாதுகாக்கிறது.

விதை உற்பத்தியாளர்கள் விதைத்த 35 நாட்கள் அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் முன்னதாக விதைப்பண்ணைகளை ஸ்பெக்ஸ் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட விதைப்பண்ணை அறிக்கை பதிவிறக்கம் செய்து 3 நகல்களுடன் இராமநாதபுரம் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். விதை உற்பத்தியாளர்கள் விதைப்பு அறிக்கையுடன் விதை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட சான்று அட்டைகள், விதை வாங்கியதற்கான அசல் ரசீது, உரிய பதிவு கட்டணம் ஆகியவற்றுடன் பதிவு செய்ய வேண்டும்.

விதைப்பண்ணை அமைக்க விதைச்சான்று கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ஒரு விதைப்பு அறிக்கைக்கு பதிவுக்கட்டணம் ரூ.25/-ம் வயலாய்வு கட்டணமாக ரூ.100/-ம் விதை பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/-ம் செலுத்த வேண்டும். விதைத்த 35ம் நாள் அல்லது பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் முன்பு இதில் எது முன்னதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும். விதைப்பண்ணையில் இரு வேறு பகுதிகள் 50 மீட்டர்களுக்கு அதிக இடைவெளியில் இருந்தாலோ, விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசப்பட்டாலோ தனித் தனியே பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்த விதைப்பண்ணைகள் பூக்கும் தருணத்திலும், முதிர்ச்சி பருவத்திலும் விதைச்சான்று அலுவலரால் வயலில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் போது வயல் தரம் மற்றும் விதைத்தரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட தரம் இருந்தால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்ட வயல்மட்ட விதை களுக்கு விதை சுத்தி அறிக்கை வழங்கப்படுகிறது.

விதைப்பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வயல்மட்ட விதைகள் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. விதை சுத்திகரிப்பு நிலை யத்தில் சுத்திப்பணி மேற்கொள்ளப்பட்டு கழிவுகள் நீக்கப்பட்டு சுத்தமான ஒரே மாதிரியான சுத்தி விதைகள் பிரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட விதைக்குவியல்களில் விதை மாதிரி எடுக்கப் பட்டு விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. பகுப்பாய்வில் தேறிய விதைக்குவியலுக்கு சான்றட்டைகள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

டான்சிடா திட்டத்தின் மூலம் விதைப்பண்ணை அமைத்த விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைகளை குறைந்தபட்ச ஆதரவு விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு சான்று பெற்ற விதைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. எனவே விவசாயிகள் விதைப்பண்ணை அமைத்தால் விதை உற்பத்தி மானியம் மூலம் கூடுதல் லாபம் பெறலாம் என இராமநாதபுரம் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிவகாமி தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காடையாம்பட்டி வட்டார விவசாயிகளுக்கு உழவர் திரள் பெருவிழா!



சேலம், அக்.4

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரத்தில், வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் உழவர் திரள் பெரு விழா 100 விவசாயிகளுக்கு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தலைமை தாங்கினார்.

வேளாண்மை அலுவலர் ஹனீஷா கலந்து கொண்டு வேளாண்மை துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மணியங்கள்






குறித்து பேசினார். மேலும் தோட்டக்கலை அலுவலர், ஸ்ரீ வித்யா பண்ணை மேலாளர் அரசு தென்னை நாற்றுப்பண்ணை, டேனிஷ்பேட்டை, புகழ்மணி. மேலாளர் (கரும்பு), வெங்கடேசன் கரும்பு ஆய்வாளர் பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட், கால்நடை உதவி மருத்துவர், பைஜு, ஜெய் இசை அமுதன் இளநிலை ஆய்வாளர், பட்டு வளர்ச்சித் துறை, தனசேகர் மேற்பார்வையாளர் வேளாண் வனிகம் மற்றும் விற்பனை துறை, ரவி மீன் வள துறை ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து பேசினர்.

பயிற்சியில் முத்துசாமி, மதிவாணன் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். சுகப்பிரியா வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் மணிமாறன் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# இப்கோ நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி

சேலம், அக்.4

சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள சரக்கப்பள்ளையூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நானோ உரங்கள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரி, எஸ்.அருள்மணி, விவசாயத்தில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா திரவ உரங்களின் இலைவழி தெளிக்கும் முறைகள் மற்றும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் அவர் நானோ திரவ உரங்களைப் பயன்படுத்துவதனால் விவசாயிகளுக்கு உரச்செலவு குறையும் என்றும், சுற்றுசூழல் மாசுபாட்டை தவிர்க் கலாம் எனவும் வலியுறுத்தினார். விவசாயத்தில், ட்ரோன் தொழில் நுட்பம் குறித்தும் ட்ரோன் பயன்படுத்துவதன் மூலம் மிக துல்லிய மாக உரங்களை தெளிக்கலாம் என்றும், வேலை ஆட்கள் தேவையை குறைக்கலாம் என்றும் கூறினார். பின்னர் உலகச் சுற்றுச்சூழல் தினத்தன்று பாரத பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிய “தாயின் பெயரில் ஒரு மரம்” நடும் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் மரக்கன்றுகளை நடவு செய்தனர். மேலும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இப்கோ சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது .



# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறைகள் குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி



மதுரை, அக்.4

மதுரை மாவட்டம், அலங்கா நல்லூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி தனிச்சியம் கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சியில் சுமார் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். அலங்காநல்லூர் வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறைகள் நன்மைகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும் மத்திய மாநில அரசு திட்டங்கள், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் நெல் நுண்ணூட்டம் வழங்குதல், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், வரப்பில் உளுந்து பயிர் சாகுபடி, வேளாண்மை விரிவாக்க மையங்களில் டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, கூகுள்பே ,போன் பே ஆகியவற்றினை பயன்படுத்தி தொகையினை செலுத்தி பொருட்கள் வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொண்டு பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார்.

மதுரை வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் டாக்டர்.சுரேஷ், நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில் கரணை விதை நேர்த்தி, குழித்தட்டு முறையில் ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் வயது 25-35 நாட்கள் நாற்றுக்களை எடுத்து நடவு செய்தல், வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியும் நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியும் பராமரித்தல், சொட்டுநீர் பாசன வழி உரமிடுதல், இயற்கை சார்ந்த உரங்கள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகள், போக்கிடங்களை பரப்புதல், மண் அணைத்தல், தோகை உரித்து பரப்புதல், விட்டம் கட்டுதல், ஊடுபயிர் சாகுபடி,இயற்கை முறையில் களை நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகளான வேப்பங்கொட்டை கரைசல் தெளித்தல், கரும்பில் இடைக்கணுப் புழுவினை கட்டுப் படுத்த முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் அட்டையை நட்ட 4 மாதம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை 6 முறை கட்ட வேண்டும்.

நட்ட 150 மற்றும் 210 நாட்கள் கழித்து தோகை உரித்தல் வேண்டும், சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் வண்ண அட்டையை பயன்படுத்துதல், தேவைக்கு அதிகமாக தேங்கியுள்ள நீரை அகற்ற வேண்டும் எனவும் காட்டுப்பன்றி விலங்கினை தாக்குதலை குறைக்க இயற்கை முறையில் தயாரிக்கப்பட்டுள்ள மருந்தினை பயன்படுத்தி கட்டுப்படுத்துல் வேண்டுமென தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத் துரைத்து விவசாயிகளின் பல்வேறு பூச்சி தாக்குதல் சந்தேகங் களுக்கு விளக்கம் அளித்து பயிற்சி வழங்கினார்.

அலங்காநல்லூர் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் ப.பால்பாண்டி, வேளாண்மைத்துறை வழங்கப்படும் மானியத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் கலந்துரையாடல் அருகில் உள்ள கரும்பு பயரில் மாவுப் பூச்சியினை பார்வையிட்டு அவற்றினை கட்டுப்படுத்த விவசாயி களுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த தொழில் நுட்பங்கள் எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும், தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பா.வேல்முருகன் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி மற்றும் சௌந்தர்ராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

## பூச்சி பொறிகள் / இனக்கவர்ச்சி பொறிகள் / விளக்கு பொறி / ஒளி பொறி – ஓர் பார்வை

**பழ ஈ பொறி இனக்கவர்ச்சி பொறிகள் :** இனக்கவர்ச்சிக்கான திரவங்களை கொண்ட ரப்பரானது பூச்சிப் பொறிக்குள் பொருத்தப் பட்ட இடைவெளியில் வயலில் அமைக்கப்படும். அதிலிருந்து வெளிவரும் வாசனை ஆண் அந்துப்பூச்சியை ஈர்த்து பொறிகளில் சிறை படுத்துகிறது.இதனால் பெண் அந்துப்பூச்சிகள் துணையை இழந்து இனப்பெருக்கம் குறைகின்றது.

**ஈர்க்கப்படும் பூச்சிகள் :** அமெரிக்கன் காய்ப்புழு, இளஞ்சிகப்பு காய்ப்புழு, டைமண்ட் பேக் அந்துப்பூச்சி

**பயன்படுத்தும் முறைகள் :** இனக்கவர்ச்சி பொறியை மூங்கில் குச்சியுடன் இணைத்து பயிர் விதானத்திற்கு மேல் ஒரு அடி உயரத்தில் பொறுத்த வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12 இனக் கவர்ச்சி பொறிகளை பரிந்துரைக்கலாம். ஒவ்வொரு பூச்சிகளுக் கும் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட இனக்கவர்ச்சி பொறிகளையும்,

இனக்கவர்ச்சி திரவங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**விளக்கு பொறி/ஒளி பொறி :** ஈர்க்கும் பொருளாக ஒளி மூலத்தையும்,கவர்ந்திழுக்கப்பட்ட பூச்சிகளை பூச்சி சேகரிக்கும் அறைக்குள் செலுத்துவதற்காக புனலையும் கொண்டுள்ளது இந்த ஒளிப்பொறி. பெரும்பாலான பூச்சி இனங்கள் ஒளிக்கு ஈர்க்கப்படும் இயற்கையை கொண்டுள்ளதால், இந்த பொறி விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமே.

**ஈர்க்கப்படும் பூச்சிகள் :** படைப்புழு, வெட்டுப்புழு, அமெரிக்கன் காய்ப்புழு, தண்டு துளைப்பான்கள், இளஞ்சிகப்பு காய்ப்புழு.

**பயன்படுத்தும் முறை :** ஒரு வாலியை எடுத்து, மேல் விளிம்பில் நான்கு துளையும்,கீழே ஒரு துளையையும் உருவாக்கி அதன்பின் ஒளி மூலத்தை சரிசெய்யவும். பெரிய அளவிளான ஒளி நிழலில் ஒளி பொறியை தொங்க விடவும். வாலியை ரப்பர் பிளக் மூலம் மூடவும். அதில் சோப்பு தண்ணீரை நிரப்ப வேண்டும். கவர்ந்து இழுக்கப்படும் பூச்சிகளை அவ்வப்போதே சேகரித்து அழிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு ஒரு பொறியை பொருத்தலாம். பூச்சிகள் அதிகம் உள்ள வயல்களுக்கு அருகில் அல்லது வயலினுள் விளக்கு பொறியை நிறுவுவது சிறப்பான பயனளிக்க வல்லது. மாலை ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை ஒளி பொறியை பயன்படுத்தவும். சிக்கிய பூச்சிகளை தினமும் சேகரித்து அவற்றை முறையாக அப்புறப்படுத்தவும்.

**பழ ஈ பொறி :** பழ ஈ பொறி என்பது ஒரு கப் ஆகும். இதில் ஒரு துளையிடப்பட்ட அட்டையின் கீழ் சாதாரண வெள்ளை அல்லது ஆப்பிள் சைடர் வினிகர் உள்ளது. வயது வந்த ஈக்கள் வினீகரால் ஈர்க்கப்பட்டு திரவத்தில் பிடிக்கப்படுகின்றன.

**பயன்படுத்தும் முறை :** பழத்தோலை சிறிய துண்டுகளாக நறுக்கி சர்க்கரை மற்றும் தண்ணீரில் கலக்கவும். பிளாஸ்டிக் ஜாடியில் தோராயமாக வட்ட துளைகளை உருவாக்கவும். கொள்கலனுக்குள் சர்க்கரை தண்ணீரை வைக்கவும். ஒரு கம்பி /கயிற்றின் உதவியுடன் தூண்டில்/லூரை மூடியிலிருந்து தொங்கவிடவும். ஒரு ஹெக்டேருக்கு இரண்டு முதல் மூன்று பொறிகளை பொருத்தலாம்.

தகவல் : **ர.மேரி கல்பனா, மூன்றாம் ஆண்டு மாணவி, ர.மஞ்சு, உதவி பேராசிரியர் (பூச்சியியல்), நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, இராமநாதபுரம்.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.